பதிவு எண் - M5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

5-கிளை தருதலம், மாம்பாக்கம்; விசய, ஆடி; ௰௧ -7 ௰௫ தளிர்-44

AUG 1958

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

எது இன்சொல்?

பிறர்க்கு உதவ ஒன்றுமில்லாதவர் இன்னுரையாவது உதவலாம் என்பது பெரியோர் கருத்து. இன்னுரை உதவுவது யாவர்க்கும் கூடும்.

மேலும், இன்னுரை என்பது எல்லார்க்கும் பொது. வேறு பொருள்களானல் அவற்றில் சில சிலர்க்குப் பொருந்தும், வேறு சில மற்றச் சிலர்க்குப் பொருந்தும். படிப்பவர்க்குப் புத்தகம் உதவலாம்; பசிப்பவர்க்கு உணவு உதவலாம். குருடர்க்குக் கோல் உதவலாம்; குருடர்க்கு அழகிய சித்திரம் உதவுதல் பொருந்துமா? ஆனல், இன்னுரை எல்லார்க்கும் பொருந்தும்; ஒருவகையான ஆறுதலை அது தரும்.

இன்சொல், எல்லார் வாயிலிருந்தும் வெளிவருதல் அரிது! இன்சொல் எல்லார்க்கும் பொதுவானதாதலின், எல்லா மக்களுக்கும் பொதுமை யுள்ளத்துடன் உதவியாய்த் திகழும் சான்றோர் வாயிலிருந்தே அவை வெளிவரும். எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணும் பெருமக்களின் உள்ளமே இன்சொல்லின் விளை நிலம்!

நடுநிலையில்லாதவரிடமிருந்து அன்பில்லாதவரிடமிருந்தும் பயன்பட உதவுதல் இல்லாதவரிடமிருந்தும் வெளிவருவன இன்சொல் ஆகமாட்டா அவர்கள் எவ்வளவுதான் நயமாக எடுத்துரைத்தாலும் அவையெல்லாம் வன்சொற்களே.

நயமாக மட்டும் சொல்லுதலன்று இன்சொல் என்பது நடுநிலைமை, அன்பு, மெய்ப்பயன் என்னும் மூன்று பெருந்தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு வெளிவருவதே இன் சொல்லாகும். இவை அடிப்படையில் வெளிவராதவை, நயமாக இருக்கினும், தீமையே பயக்கும் பயனில் நன்மை பயப்பதே 'படிறில்லாமை' எனப்படுவது; தன்னல மற்ற இனிமையே 'ஈரம்' என்பது. பொதுமை மெய்யறமே 'செம் பொருள்' ஆவது!

இத்தகைய இன்சொல் உலகத்தை ஆறுதல் செய்தல் ஒருதலை! நிழலின் அருமை போல்வது இவ் வின்சொல்!

"இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்"

இன்சொல்-இனியசொல் என்பன, ஈரம் அளைஇப் படிறு இலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்-அன்பு கலந்து கரவு இல்லாதனவான, மெய்ப் பொருளுணர்ந்தார் வாயின் சொற்களே!

இன் சொலால் என்றது இரட்டுற மொழிதல். ஆல் அசையாதல் ஒன்று; இதற்கு, 'இன் சொல் படிறிலவாம் சொல்' என இயையும்; இனி, இன் சொலால் செம்பொருள் காண்டலும் வாய்த்தலின், அவ்வேதுவும் உணர்த்துதல் மற்றொன்று.

மெய்ப்பொருள் உணர்ந்த பெருமக்கள் வாயிலிருந்து வெளிவருஞ் சொற்களே அன்பு கலந்து வஞ்சனையின்றி வெளிவருவனவாதலின், 'ஈரம் அளைஇப் படிறு இலவாம் சொல்' என்று அவற்றின் இயல்பைக் கூறினர்.

அன்பு கலந்த சொல் பொய்யில்லாதனவே யாயினும், அவற்றின் பயனும் வேறுதல் கூடாது என்பது பற்றிப் 'படிறிலவாம்' எனவும் விதந்தார்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்— கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	விசய, ஆடி,	தளிர்
5	31-7-53 வெள்ளி	44

வேலையில்லாமை

படித்த மக்களிடத்திலும் அல்லாதாரிடத்திலும் வேலையில்லாக் குறை பெரிதாக உள்ளது.

'ஒருவனுக்கு இங்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்பது பின்னைப் பெரியோர் வீரக் கருத்து! பிறர் பட்டினி வயிற்றைப் பார்த்து நெஞ்சிரக்கமுடையோன் ஒருவன் உலகத்தோடு போர் தொடுக்க வேல் வடிப்பிப்பான்' என்பது முன்னைப் பெரியோர் தீரக் கருத்து; இருக்கலாம்!

இவை அவரவர் இரக்கவுள்ளத்துக்கு எடுத்துக் காட்டாக உதவும். ஆனால், நடைமுறைக்கு?

உண்ணவும் உடுக்கவும் இருக்கவும் அறியவும் தெளியவும் உதவவும் மகிழவும் பொருள் தேவை; அதற்கு வேலை தேவை. வேறு முறைகளால் பொருளைப் பெற அவாவாமல், வேலை தேவை என விரும்புவது அழகிய எண்ணமே!

எத்தகைய வேலை என்பதும், அவ் வேலைகள் கிடைக்க வழி எவை என்பதுமே கருதத் தக்கவை!

அறிவு வேலையாயினும் கை வேலையாயினும் பிறர்க்கு அடிமையாயிருக்கும் வேலைகள், பிறவியுணர்வின் வளர்ச்சிக்கு ஏற்றவையல்ல. ஆட்சியிடங்களிலும் வாணிகத் துறைகளிலும், சில தலைமையான அலுவல்களானால் அவ் வளர்ச்சிக்கு ஓரளவு இடமுண்டு.

ஆதலால், உரிமையான தொழில்களே குடும்பங்களுக்கு வேண்டும்; ஒவ்வொரு குடும்பமும் ஒரு கூட்டுறவு நிலையம் போல் தொழில்களில் விளங்கலாம். விரும்புவோர், விரும்பிய தொழில்களில் கூட்டுச் சேரலாம். அடிமைப் பணிதானே அல்லல்!

நாட்டில் அத்தகைய நிலையான தொழில், உரிமைத் தொழில், உழவு ஒன்றைத் தவிர வேறு இல்லை. இவ் வுழவுக்கும், ஏனை உடுத்தல் இருத்தல் முதலியவற்றிற்கும் துணையான இன்றியமையாத கைத்தொழில்கள் மேற்கொள்ளத்தக்கவை. அவையும் கூட்டு முறையிலேதான்!

பெருந் தொழில், உழவாகவே ஒவ்வொரு நாட்டிலும் இருக்க வேண்டும். உழவுக்குப் பயன்படாத நாடுகளுடையோர் தக்க நாடுகளில் குடியேறி அந்நாடுகளுக்கு உரியோராக மாறி அந்நாடுகளிலேனும் உழவுக்குப் பயனுதல் உயர்ந்தது!

'இல்லையே என்று வருந்திக் கொண்டிருப்பது ஏன்? நிலம் என்னும் நல்லவள் இருக்கும் போது?' என்பது எக்காலத்துக்கும் பொதுவான பெரியோர் கருத்து!

இன்றியமையாதனவான இத் தொழில்களைச் செய்ய நாட்டில் ஏராளமாக இடமிருக்கும்போது, இல்லையே என்று வருந்திக் கொண்டிருப்பவர்கள் உண்மையான நாட்டன்பர்கள் ஆவது எப்படி?

ஒன்று, கட்டாயமில்லாத செலவுகளிலே, ஆடம்பரச் செய்கைகளிலே முயற்சியுடையவர்களாய் இருக்கவேண்டும்; அல்லது செயலற்ற சோம்பலுடையவர்களாய் இருக்கவேண்டும்.

அத்தகையோரின் உணவுக்கு இரங்கிப் பயனில்லை; அறியாமைக்கு இரங்கி அதற்கு ஆவன செய்வதிற் பொருளிருக்கிறது.

கடமைகளிற் கருத்துக் கொண்டு, உயிருணர்வின் உரிமை வளர்ச்சிகளில் உறுதிகொண்டு உடம்பாலோ அறிவாலோ உழைக்க முன் வருவார்க்கு நாட்டில் ஆதரவு இருப்பது இன்றியமையாதது. இங்க ஆரம்ப ஆதரவுக்கு, நகரத்திற் கல்வி பயின்றவரானாலும் நிலையிற் சிறந்தவரானாலும், நிலமுள்ள இடங்களைக் கிராமங்களைத் தேடிச் சென்று இயன்ற வண்ணம் உழைக்கும் பெருமிதத்துக்கு மக்கள் மாறினால், இந்தப் பொதுமை தழைத்தால், நாடுபெருமித வளர்ச்சியைப் பெறுதல் உறுதி! வேலையில்லாமை பற்றிய தலைவலி யார்க்கும் இராது!

* பெரியபுராணம் *

(சிவக்கவிமணியின் செந்தமிழ்க் கட்டுரை)

(முன் தொடர்ச்சி)

அவ்வுண்மைகளின் சுருக்கமாவது:— இறைவன் ஒருவன் உண்டு. உயிர்களைக் கட்டிய பாசக்கட்டமும் உண்டு. இவை மூன்றும் அநாதி நித்தியம். இறைவனும் உயிர்களும் அறிவுப் பொருள்கள். ஆனால் இறைவன் முற்றறிவன்: பேரறிவன்: எல்லாம் வல்லவன். உயிர்கள் அவ்வாறன்றிச் சிற்றறிவும், சிறிய ஆற்றலும் உடையன. அதற்குக் காரணம் இவற்றினறிவு ஆணவம் என்கின்ற மூலமலத்திற்குக் கட்டுப்பட்டதேயாகும். இக்குறையை நீக்கிப் பேரறிவும் பேராற்றலும் பெற உயிர்கள் முயலுதல் வேண்டும். அதற்குச் சாதனமாவன குருவருளும் அவன் காட்டிய வழி நின்று தியானித்தலும் திருவைந்தெழுத்தை விதிப்படி எண்ணுதலுமாம். அவ்வுயிர்களின் முன்னைத் தவத்துக்கும் பக்குவத்துக்கும் ஏற்ப இறைவனே குருவாக வந்து பாசக் கட்டங்களினீக்கும் வகையினை உணர்த்துவர். அப்போது பாசக்கட்டங்கள் வலியிழந்து நீங்க, உயிர் இறைவன் கழலிற் செல்லும் ஞானக் கண்ணினாலே சிவனை நாடும், சிவபஞ்சாக்கரத்தினால் பாசம் நீங்கும். இவ்வாறு இறைவனோடு ஒன்றித்து நின்று இறைபணி செய்யப் பாசங்கள் என்னும் மும்மலங்களும் இல்லையாம். இந்நிலை பெற்ற உயிருக்கு இறைவனே கண்காட்டுவான். மறவாத அன்பினாலே சிவனது பாதத்தை அவ்வுயிர் சேர்ந்து நீங்காமல் நிற்கும். இவ்வாறு அடிமறவாது நிற்கும் உயிர், பிராரர்த்த வினை உள்ள அளவும் உடல் நிற்குமாதலால் அவ்வளவும் இவ்வுலகில் வாழும். அவற்றுக்குச் சீவன் முத்தர் என்று பெயர். அப்போது முன் வாசனை தாக்காது கருவிகரணங்கள் ஒரு வழி நிற்றற் பொருட்டுத் தன்னைப் போலவே மலங்கழுவிய சீவன் முத்தர்களோடு இணங்கும். சிவனடியார் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவே கண்டு வழிபட்டு நிற்கும். இதற்கு அணைந்தோர் தன்மை என்று பெயர்.

இவ்வுண்மைகளைச் சைவசித்தாந்தத்தில் பன்னிரண்டாக வகுத்துள்ளார். அவைதாம் மெய்கண்ட சாத்திரங்களுட் சிறந்த சிவஞான போதத்தினுள் 12 சூத்திரங்களாகப் பேசப்படும். முன் கூறியபடி சீவன் முத்தர்களாகிய அணைந்தோர் தன்மை 12·ஆம் சூத்திரத்துள் இலக்கண வகையாற் கூறப்பட்டுள்ளது. சைவத் தெய்வத் திருமுறைகளும் தேவார முதலாகப் பன்னிரண்டாக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பன்னிரண்டாவது பெரிய புராணமாகும். ஞான சாத்திரங்களுள் இறுதியாக இலக்கண வகையால் வகுக்கப்பட்ட சீவன் முத்தர்களாகிய சிவனடியணைந்தோர்களை இலக்கிய வகையால் உதவின முகத்தாலே பன்னிரண்டாவதாகிய இத்திருமுறை எடுத்துக் காட்டுதல் தெய்விகப் பொருத்தமாம்.

சைவ சித்தாந்தத்தின்படி இறைவனை உயிர்கள் அடையும் வழிகள் சரியை முதலாகிய நான்காம்: இறைவனைக் கண்டு வழிபடும் இடங்கள் குருவும் இலிங்கமும் அடியார் வேடமும் என்ற மூன்றும். இந்த நான்கு வழிகளின் மூலம் இம்மூன்றிடங்களிலும் வழிபட்ட பெரியார்களின் சரிதங்களே இப்புராணத்துட் பேசப்படுவன. உலகியலில் காணும்போது இவர்கள் எல்லா நிலைகளிலுமிருப்பர். அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் பிறமரபினர் இல்வாழ்வார் துறவி அமைச்சர் முதலிய எல்லா வகையினர்களும் இதனுள் உண்டு. இவர்கள் வாழ்ந்த உலக வாழ்க்கை வரலாறுகளும் கூட உயர்ந்த படிப்பினைகளைத் தரும். ஆனால் எந்நிலையினின்றாலும் அவர்களின் உயிர் பற்றிய சில வாழ்க்கையே இந்நூலுட் போற்றப்பட்டது. இந்நூல் தலையாய நூல்களில் சிறந்த தொன்றாகும். இது சிறந்த எடுத்துக் காட்டாகிய நூலுமாம்.

கம்பர் முதலிய சிறந்த தமிழ் வாணவர்கள் இந்நூற் கருத்துக்களையும் ஆசிரியரையும் எடுத்துப் பாராட்டி யுள்ளார்கள். பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவசித்தாந்த சந்தானாசாரியாரும் உயர்ந்த ஞானியுமாகிய உமாபதி சிவாசாரியார் இந்நூலையும் ஆசிரியரையும் பற்றியதொரு புராணம் இயற்றியுள்ளார். மாதவச் சிவஞான முனிவர் இவரைப் போற்றியுள்ளார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இதன் ஆசிரியருக்குப் பிள்ளைத் தமிழ் பாடிப் பாராட்டியுள்ளார்: அதனால் இவ்வாசிரியர் எடுத்துக் காட்டியிரா விட்டால் உலகில் மரபு வழக்கு என்பதை யாவர் அறிவார் என்று போற்றுகின்றார்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

மொழித் துறை

* ஈரடி இருநூறு *

நூலாசிரியர் – திரு. ச. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.
(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

(முன் தொடர்ச்சி)

அதிகாரம் 2.

உலகு

அஃதாவது உலகின் இயல் கூறுதல். இறைவியாகிய தாயையே தாஅய்க் கிடந்து அன்பைப் பெருக்கும் இயல்பின தாகலின் அது, தாய்மை என் னும் அதிகாரத்தின் பின் வைக் கப் பட்டது.

1. வாழி உலகேநீ வாய்த்
திலையேல் வாழ்வேது
பாழன்றி உண்டோ பிற.

(உ-ரை) உலகமே, வாழ்வா யாக! நீ தோற்றமுற்றிலையேல் உயிர்களுக்கு வாழ்க்கை ஏது? பாழ் அல்லாமல் பிற உண்டோ?

(வி-ம்) வாழி அசையுமாம். உயிர்களின் வாழ்க்கை மலர்ச் சிக்கு உலகம் கருவியாதலின், ‘வாழ் வேது’ எனவும், அந் நிலை யில் உலகம், உயிர், இறை என் னும் முப் பொருள்களுக்கும் நிகழ்ச்சியின்மையின் ‘பாழ்’ என வுங் கூறினர். இதனல், உலகத் தின் இன்றியமையாமை பெறப் பட்டது.

2. துன்பமோ? அன்று; துணை
யென்ப இவ்வுலகம்
அன்பிற் கமைத்த நெறி.

(உ-ரை) இவ்வுலகம் துன்பந் தருவதோ, அன்று; இன்பத்திற் குத் துணையாவது; அன்பின் மலர்ச்சிக்கு உதவியாக அமைக் கப்பட்ட நெறிமுறை யுடையது என்று சான்றோர் கூறுவர்.

(வி-ம்) ‘என்ப’ என்பது மேலோர் மாட்டு நின்றது; அதனை இரண்டுக்கும் இயை பாக்குக! மேல் வருவதற்கும் ஒக்கும். பயன் படுத்தும் முறையறிவார்க்குத் துன்பமோ அன்று எனத் தொடர்க.

3. அறிவாகிக் காண
அரங்கென்ப அன்புட்
செறிவார்க்கே தெய்வ உலகு.

(உ-ரை) அறிவுடையராகி நோக்க உலகம் அறிவு மன்ற மாகும். அன்பு அகத்தில் நிறை யப் பெறுவார்க்கோ அது தெய்வ உலகமாகும் என்ப.

(வி-ம்) அறிவும் அன்பும் உடையார்க்கு உலகம் துன்ப நிலைக்களமாகாமல், அறிவு நிலை மாகவும் தேவ உலகமாகவும் பயன் செய்து இன்ப முளதாக் கும் என்பது. ஆக்கம் வருவித் துக் கொள்க. ஒகாரம் சிறப்பு.

4. அறிவறிந்த இல்லைகொல்
அன்பின் வழியை;
அறியின் அழியும் இடர்.

(உ-ரை) அறிவு, அன்பின் வழியை அறிந்ததில்லை போலும்; அறிந்தால் உலகத்தில் துன்பங் கள் கெடும்.

(வி-ம்) கொல், ஐயம். குற்ற முங் குணமும் பகுத்தளந்து காணும் அறிவு, பின்னர்க் குற் றம் மறந்து குணமொன்றே கொள்ளும் அன்பில் இயைந்து நிகழ வேண்டுமாகலின், ‘அறிவு அன்பின் வழியை அறிந்ததில்லை கொல்’ என்றார். இடர் சாதி யொருமை.

5. உலகை உணருங்கால்
ஊறுவ தின்பம்;
நலந்துய்க்க நஞ்சாம் மிக.

(உ-ரை) உலகத்தின் எழிலை அறிவினுலும் அன்பினுலும் ஆய்ந்துணரும் நிலையில் சுரப்பது இன்பமாம். புலன்களால் அவ் வெழிலை நுகர முயலின் அது மிகவும் நஞ்சொத்த துன்பமாம்.

(வி-ம்) “துய்ப்பேம் எனினே தப்புந பல” என்றார் புறத்தி னும்*. ‘ஊறுவ’ தென்றது இடை விடாமை கருதிற்று. உணர் வார்க்கு உலகம் இடைவிடாது இன்பம் ஊறும் நன்னிலையம், என்பது பொருள்.

6. அழுவார் அழக்காட்டும்
ஆடி உலகாம்
எழுவாரே காண்பார் எழில்.

(உ-ரை) உலகம், துன்பங் கொள்வார் துன்பங் கொள்ளு மாறு காட்டும் ஆடியாம். அவ் வாறன்றி இன்பக் கிளர்ச்சி கொள்வாரே அவ்வாடியிற் கிளர்ச்சி காண்பார்.

(வி-ம்) அழுவார்க்கு அழுகை யும் மகிழ்வார்க்கு மகிழ்வையுந் தந்து தன்னியல்பில் யாதொரு

*புறநானூறு.

களங்கமுற் இன்றித் திகழ்தலின் உலகம் ‘ஆடி’ எனப்பட்டது. “உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்” தென்றார் ‡பிறரும். ஏகாரம், பிரிநிலை. இவை ஐந்து பாட்டானும், உலகத்தைப் பயன் கொள்ளும் வகை நுவலப்பட்டது.

7. புலர்ந்த பல பகல்கள்
போய்மறைந்த பின்னும்
புலரும் பகலோ பல.

(உ-ரை) விடிந்த பல நாட்கள் சென்று கழிந்த பின்பும் விடியும் நாட்களோ பல உள்ளன.

(வி-ம்) ஆகவே, கழிந்ததற் கிரங்குதல் வேண்டா என்பது. சென்றன செல்லினும் வருவன உண்டாதலின் நிலையாமை நெறியிலும் ஓர் நிலை இருத்தல் கண்டு தொடர்ந்துகொள்க வென்பது கருத்தாயிற்று. மேல் வருவதும் இது. ஓகாரம் ஒழியிசை.

8. மலர்ந்தனவே மாள;
மயங்கலீர்; அன்றே
அலரும் அரும்பே பல.

(உ-ரை) மலர்கள் தம்பயனைத் தந்து மாயும் பொருட்டே மலர்ந்தன, ஆகலின் அறிவு கலங்கன்மின்; அன்றை மலரும் அரும்புகள் பின்னும் பல உள்ளன.

(வி-ம்) மாளவே மலர்ந்தன வென்க. ஏகாரம், தேற்றம்; அன்றே என்பது தொடர்ச்சியின் இடைவிடாமை புலப்படுத்திற்று.

9. அழிவென்ப தொன்றும்
அழிவன்று; மாற்றம்;
இழிவன் றுலகுக் கிது

(உரை) அழி வென்று கூறப்படுவதாகிய நிகழ்ச்சியும் கேடன்று; பொருள் மாற்றம்; உலகுக்கு இது இழிவன்று.

(வி-ம்) ஒன்று இடை நிலை உம்மை, இறந்தது தழீஇயது. புதுமை பெறுதலாகிய மாற்றமே பழமை கழிதலாகிய அழிவாதலின் ‘அழிவன்’ றெனவும் பயன் படாமை யொன்றே இழிவாகலின் ‘இழிவன்’ றென கூறினார். அவை மூன்று பாட்டினும் உலகத்தின் நிலையாமையால் இன்னலோ இழிவோ இல்லை எனபது விளக்கப்பட்டது.

10 தூற்றுதார் யாருளரே
தொல்லுலகை ஏற்றவரை
மாற்றுமே நாவேற் றுலகு

(உ-ரை) பழமை பொருந்து வரும் உலகத்தைப் பழியாதார் யாருளர்? ஏறு போன்ற நாவினை யுடைய உயர்ந்தோர் அவரைத் தழீஇ மாற்றுவாரோ?

(வி-ம்) மாற்றுவராயின் நன்றெனறபடி. ஓகாரங்களுள் முன்னது அசை, பின்னது வினா. நாவேற்றுல கென்றது புலவரை; அது நாவன்மை தோன்ற நின்றது. இதனால் உலகத்தை அறியாது பழிப்பாரைத் திருத்துதலின் இன்றியமையாமை பெறப்பட்டது.

(வரும்)

‡தொல். உரி. 95.

(3-ப் பக்கம் தொடர்ச்சி)

நூற்பயன் அறமுதலிய நான்கேயாம் என்று பெரியோர் கூறும் உண்மை இந்நூல்களால் உண்மையே யாகும்.

வழிபடு நேரத்தில் மோனத்தில் இருந்து பிறகு பாடவேண்டும். அலங்காரம் செய்யும் போது மோனத்திலிருக்கலாம். மோனத்திலிருந்து பாடினால் தான் நல்ல ஒலி பிறக்கும், தலத்துக்குப் போய் அருள் நோக்கோடு பொருந்தி, அமைதியாக இருப்போமானால், அந்த இடத்தில் உள்ள ஆற்றல் நம்மிடத்தில் வந்து சேரும். அமைதி இல்லையென்றால் ஒரு ஆற்றலும் வராது. அருள் நோக்கத்தோடு கூடிய அமைதியில் நின்றால் தான் அங்கு உள்ள தெய்வ சக்தியை உறிஞ்சும் தரம் வரும். தாய் நோக்கத்தோடு இருக்கிற குழந்தைக்குத் தாய் எதிர்ப்படுவது போலவும், தாய்ப் பசுவை நினைந்த கன்று தாவி வருவதைப் போலவும் நம் நோக்கம் இருக்க வேண்டும். உலகியலிலிருந்து மாறி, ஒளி வடிவாகத் தூய்மையாக இருந்து, ஒலி பெறும் நோக்கத்தில் சிறகப் பையப் பையத் திருவடி சித்திக்கும். ஒலியே திருவடி இறைவனே ஒலி. இப்படிப்பட்ட பர நாத ஒலியில் நாம் சேரவேண்டும். இதுவே நம் தலை சிறந்த கடமை எனக் கடமை கருதிச் சொல்கின்றேன்.

கழுக்குன்றத்திலேயே பிறந்து வளர்ந்தவர்கள் பெறாத பேற்றை வெளியிலிருந்து வந்த மணிவாசகர் பெற்றார் காரணம் என்ன? அங்கேயே இருந்து வந்தாலும் அருள் நோக்கம் வேண்டும். தகுதிவேண்டும். கழுக்குன்றத்தின் உச்சியில் இறைவன் ஒலி வடிவாகத் திகழ்கிறான் எனப் பாவித்து அருள் நாத ஒலியை வாங்கினால் அங்கு உலவிக் கொண்டிருக்கும் தெய்வ சக்தியை உறிஞ்சும் பக்குவ நிலை கிட்டும். இப் பக்குவத்தில் இருப்பது நம் கடமை என எண்ணினால் அப் பாக்கியம் நன்றாகச் சித்திக்கும்”.

அருள் துறை

அருள் நாத ஒலி

(சோமசுந்தரம்)

(முன் தொடர்ச்சி)

பன்றியும் அன்னமுமாக, கீழும் மேலும் சென்ற இருவரும் சோதியைப் பார்த்துத் திகைத்தனர். திகைத்த நேரத்தில் சோதியின் நடுவில் ஒரு மூர்த்தி தோன்றியது, பெருஞ் சோதி லிங்கமாகக் கொள்ளப்பட்டதால் லிங்கத்தினின்றும் தோன்றிய மூர்த்தி லிங்கோற்பவர் என்னும் பெயர் பெற்றது. இது மகேசுர மூர்த்தங்களில் ஒன்று.

தோன்றிய மூர்த்தி சில சொற்களைச் சொல்லிற்று. முடியைப் பார்த்தேன் எனப் பிரம்மா பொய் சொல்லிய காரணத்துக்காக 'உனக்குக் கோயிலில்லாமல் போகக் கடவது' என்று கூறியது; மனப் பயிற்சியின் காரணத்தால் நல்ல கல்வியாளர் உருவகம் செய்கிற கற்பனையில் சிறந்திருப்பர். கல்வியிற் சிறந்தவன் கம்பன் என்பது அவர் கூறிய கற்பனைகளின் பெருமையைக் காட்டுகிறது. உண்மையோடு பொருந்திய கற்பனையினால் அருள் கல்வியாளராலும் எட்ட முடியாதபடி இறைவன் இருக்கிறான். இது பிரம்மாவினால் தெரிந்துகொண்ட உண்மை.

விஷ்ணுவுக்குக் கோயிலும் இருக்கட்டும், ஆட்சியும் இருக்கட்டும்' என்றது, கீழே சென்றாலும் மெய் சொன்னவர் சிறப்படைந்தார். மேலே சென்றும் பொய் சொன்ன காரணத்தால் தாழ்த்தப் பட்டார். ஆகவே நமக்கு எந்த நிலையிலும் காவு கூடாது. ஆளுக்கும் இடத்துக்கும், காலத்துக்கும், போற்றதலுக்கும் ஏற்றபடி மாறுகிற நிலை கூடாது. எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் உண்மை வழிப் போவது தெய்வீகமானது. ஆண்டவன் உண்மை ரூபி. அவனை வழிபடுவோரும் உண்மை வழி நடக்க வேண்டும்.

ஒளி தோன்றி மூர்த்தி தோன்ற ஒலி பிறந்தது என்றதால் சோதி தோன்றிய பிறகு தோன்றுகிற நலம் ஒலி! ஒளி வடிவினராகிய பெரியோர் நல்ல வாக்குகளைக் கொடுப்பர். இவை நம் கடமை உலகில் இருளிவிருந்து நீக்கி அருளுக்கு ஆயத்தமாக்குகின்றன. திருவள்ளுவரால் நமக்குக் கிடைக்கப் பெற்றது எது? சொத்தா? குழந்தையா? குறள் என்ற வாக்கையே அவர் உலகுக்குக் கொடுத்தார் இது, அருள் நிலையில் உயர்வதற்கேற்ப நம்மை தெளிப்படுத்துகிறது.

அருள், மருள் என இரட்டையாக எண்ணும்போது அருள் என்பது ஒலி. ஒலியே அருளாக இருந்து வேலை செய்கிறது. இவ்வொலி மோனத்தில் எழுவது; தனித்து இருப்பது; கணக்கு உவமையில்லாதது. இம்மாதிரி வேறு ஒரு பொருள் உலகில் உண்டா? உவமையிலிருந்து அருளுக்கு மாறச் சோதி பெறுவது என்பது இடைக்குறிப்பு. நல்ல தகுதியில் மாறிய பிறகு அருளில் நிலைத்திருப்பதற்குரிய அடையாளம் ஒலி. இறைதுணை நமக்கு இருக்கிறது. என்ற தெளிவு இருக்குமானால் நாம் சோம்பேறிகளாக இருக்கக் கூடாது. ஊக்கமான செயல்

நஞ்சன்கூடு பல்பொடி

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,

54; பந்தர்த் தெரு,:: சென்னை 1

களைச் செய்தால்தான் நால்வரைப் பின்பற்றி அருளில் முன்னேறுவதாக இருக்கும், அருளே ஒலி வடிவமானதால் நல்ல செயல் முறைகளில் இருந்து பாடினால் ஒன்றுக்குப் பத்தாக நெல் விளைவது போல நலம் பெறலாம். வளர்ச்சி முகமாக இல்லாமல் அப்படியே இருப்பது பட்டுப் போவதற்கு அடையாளம். வளர்ச்சியில் இருந்தால்தான் இருக்கிற தெய்வ நிலை குறையாது.

நாம் அகத்திலும் புறத்திலும் சுத்தமாக இருக்க வேண்டும். ஒளியாகிய தூய பொருளோடும் ஒலியாகிய இசையோடும் கலந்து வாழவேண்டும். அருள் வாக்கில் இசை கலக்குமானால் நம்மை உருக்கத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும். பொருளுக்கும் கலைக்கும் அப்பாற்பட்ட வாக்கில் இசைக்கலை சேரவேண்டும். செல்வத்தில் சிறந்தது ஒளி; கலையில் சிறந்தது இசை; இருள் நீங்கிய கருவி கரணங்களோடு கூடிய பரிசுத்த உடம்பாக இருப்பது, பசு கரணத்தினின்று உயர்ந்து பதி கரணத்துக்கு வந்ததாகும். இருள் உடம்பு ஒளி உடம்பாக மாறி, இசைக்கலையில் பொருந்தி அருள் போக்கிலும் பொருந்த வேண்டும், தெய்வ ஒளியோடு கூடிப் பாட வேண்டும். இதனால் இசையும் அருளும் கடந்த ஒரு பொருளோடு சேர்கிறோம். இப் பெரிய பாக்கியமே வழிபாடாக அமைந்திருக்கிறது.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Telegrams: "RAMBROS"
N.Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

* நெஞ்சு விடு தூது *

(முத்துசாமி)

(முன் தொடர்ச்சி)

தூது:

"விழித்தருளை...வாராய் இனி"
(119-129)

நெஞ்சே, கடாட்சத்தால் திருவருள் தந்து எம்மை ஆண்டருளும் மறைஞான சம்பந்த முனிவன் என்போன் இறுதியைக் கடந்து நின்றவன்; அப்படிப் பட்ட என் தந்தை இருக்கும் கொலு மண்டபம் எய்தித், திருவடியில் வீழ்ந்திறைஞ்சிப் போற்றி சய சய போற்றி யென்றும்; "ஆர்ப்பரித்து வந்த யானையைத் தோலுரித்து அழித்தாய்; உன்னுடைய பவனியைக் கண்டவர்கள் மன்மதன் பாணத்துக்கு வீழ்வரோ? ஓர் இடத்தில் நில்லாத செல்வம் நிலையென்று நினைத்து அதனைப் பற்றிக் கொண்டு உனை நீங்கிப் பொல்லா நரகிற் புகுவரோ? பலரும் கத்தும் சமயக் கணக்கிற் பட்டுச் சித்தம் திகைப்பரோ? முத்துப் போன்ற பற்களையுடைய பெண்களின் அற்பக் கலவியின்பம் மருவி மயங்குவரோ? பெரும்பொழுது சிறுபொழுது என்னும் இருபொழுதும் இருப்பத்தேழு நட்சத்திரமும் நவக்கிரகமும் நம்மை நலிவன வென்று எண்ணுவரோ? மன்மதனை எரித்த விழியுடையவனே! உன்னுடைய இன்பக் கடற்கே பொறுத்து மதிமறந்த தையலின் வருத்தமெல்லாம் தீராய்" என்றும் பலவாகத் துதித்தும் வேண்டியும் பணிவோடு அவன் திருவடியைக் கேட்டு அவனுடைய அழகு நிறைந்த கொன்றை மாலை வாங்கி என்னிடம் பொருந்த வா.

நெஞ்சே நீ போகத் தகாத இடங்களைக் கூறினேன். அங்கெல்லாம் செல்லாமல் நான் அன்புவைத்த ஆண்டவன்பால் சென்று பணிந்து என் அன்பைத் தெரிவித்துத் தையலிவள் வருத்தம் தீர்ப்பாய் என்று சொல்லி அவனுடைய கொன்றை மாலை வாங்கி வா என்று தூது விடுத்தார்.

முற்றிற்று!

(8ம்-பக்கம் தொடர்ச்சி)

வனைத் திட்டல், அதைக் கண்டு, கேட்டல், ஒருவன்:—உனக்கு உணர்ச்சியில்லே; நாலு ரூபா வாங்கி நாலு மாசம் ஆச்சு. இன்னும் கொடுக்கா திருக்கியே, அறிவில்லே, மானமில்லே; மரியாதையாகப் பணத்தை வச்சுட்டு அப்புறம் உன் வேலையைக் கவனி, தெரிந்ததா?

ஓகோ! உம், அவன் நாலு ரூபா கடனைத் திருப்பித் தாராததற்காக இப்படிப் பேசுகிறன! பணம் இல்லேன்னா உலகமே இல்லே. மானம் உணர்ச்சி எல்லாம் காற்றில் பறக்க வேண்டியதுதான், (தன் வீட்டையடையவும் மணி 7 அடிக்கவும் சரியாக இருத்தல்; விளையாடும் தன் மகனை விளித்துப் படிக்கச் சொல்லல்.

"அருளிலார்க்கு அவ்வுலகம்
இல்லை; பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

எனப் படிக்கிறன்.

—மணி.

எண்ண அலைகள்

மாலை நேரம். வீட்டிற்குச் செல்லும் வழியிலே நாகராசனும் அனந்தராமனும் சந்தித்துப் பேசிக் கொள்கின்றனர்.

அ. ராமன்:— வணக்கம்.

நா. ராசன்.— வணக்கம்; வீட்டிலே குழந்தைகள் எல்லோரும் நலமா? பையன் படிக்கிருனா? (பையைப் பார்த்தான்) பையிலே என்ன?

அ. ராமன்:— ஒன்றுமில்லை. பையிலே நாட்களைப் போக்கக் கூடிய பொருள்கள் உள்ளன. உடலுக்கு வலிமை தரக்கூடிய பொருள்கள் உள்ளன சருமத்தை அழகு படுத்தும் பொருள்கள் உள்ளன. வீட்டிற்கு வந்த விருந்தாளிகள், 'கருணையுடையவன் இவன்' என்று பெயர் உதவக் கூடிய பொருள்கள் உள்ளன. 'அவரைப் போல இந்த உலகத்தில் ஒருவர் உண்டா? அவர் மிக மிக நல்லவராயிற்றே' என்று சில மணி நேரம் புகழ் பெறுவதற்கு உதவக் கூடிய பொருள்கள் உள்ளன.

நா. ராசன்:— அப்படியென்றால் பையிலே அரிசி, உப்பு, மிளகாய்........

அ. ராமன் ஆமாம், கொத்தவால் சாவடியிலுள்ள காய் கறி பதார்த்தங்கள், மளிகை சாமான்கள் முதலியன. இது புரியவில்லையா?

நா. ராசன்:— எல்லாம் புரிந்துதான் இருக்கு, வரட்டுமா. வணக்கம்.

அ. ராமன்:— வணக்கம்;

நா. ராசன் (தன் மனதில் அடடா என்ன! இந்த உணவுப் பொருள்கள் செய்யும் வேலைதான் என்ன! ஒன்று உயிரோடு வாழவும், வலிமையுடன் வாழவும் உதவுகிறது. இரண்டாவது, பொருள் இருந்தால் தான் எல்லாம் நடக்கும்போலிருக்கிறது. வாழ்க்கைக்குப் பொருள் கட்டாயமானது. அடடா; என்ன அது ஒரே கூட்டம் உம்; யாரோ பேசுகிருர்.

(கம்பத்தில் கட்டியிருக்கும் விளம்பரத்தைப் பார்த்தல்'

கோபாலன் என்பவர் பேசுகிருரா? கோபாலன் பேச்சு:

செல்வம்; செல்வம் கட்டாயமானது; நான் சொல்லுவது பணமோ அல்லது வேறு ஒரு பொருளோ அல்ல. நம்மிடத்திலே உள்ள செவிச் செல்வம் தான். இந்தச் செல்வந்தான் தலை சிறந்த செல்வம். இந்தச் செல்வந்தான் அறிவை வளர்க்கக் கூடிய செல்வம். இந்தச் செல்வத்தினுல் மற்றச் செல்வங்களைப் பெறலாம். ஒருவன் நிரம்பப் பணம் பெற்றிருந்த போதுர், அதனுல் அவன் பெரும் பயன் அடையான்.

"செல்வத்துள் செல்வம்
செவிச் செல்வம் அச் செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"

என வள்ளுவர் வகுத்துள்ளார். ஆகவே, அன்பர்களே செவி செவிடாக இருந்தால் அவன் பிறர் பேசுவதை அறியான். இசையை அறியான்.

நா. ராசன்:— (வீட்டிற்குப் போக வேண்டும் என எண்ணி வீடு நோக்கிச் செல்லல்.) தன் மனதில், உலகத்தில் பல கோடி மக்கள் பிறக்கின்றனர்; இறக்கின்றனர், இயற்கை நியதியின் படி. அரிது அரிது மானிடராயப் பிறத்தல் அரிது அப்படிப் பிறந்த மனிதர்கள் பகுத்தறிவு உடையவர்களாகவும் பகுத்தறிவு அற்றவர்களாகவும் வாழுகின்றனர். இவ்வுலகத்திலே அரசன்-ஆண்டி, நல்லவன்-கெட்டவன், கற்றவன்-கல்லாதவன், சாதாரண மனிதன்-முற்றும் துறந்த முனிவன் இப்படியெல்லாம் முழு உருவத்தோடு ஆனுல் சிலர் செவிடர்களாய், குருடர்களாய்! இதைத்தானே அருணகிரி நாதர் "செவிடு குருடு வடிவு குறைவு சிறிது மிடியும் அணுகாதே" என நெஞ்சு நெக்குருகும் பாவனையில் பாடுகிருர் ஆம், செவியை நாம் பெற்றிருக்கிறேம். செவியிலே பலவகைச் செய்திகள் விழுகின்றன. இவைகளை வைத்து ஆராய்ந்து நாம் எவ்வாறு நல்வழியில் இருக்க வேண்டும் என்பதைத் துணிய இது பயன்படுகிறது.

(கிரிய கூட்டம் ஒன்றைக் காணல். அங்கு ஒருவன் மற்ற

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்